
ரூ. 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039

கார்த்திகை - நவம்பர் 2008



குன்றக்குடியில் குழந்தைகள் தின விழா 14-11-2008

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ஆண்டு 2039 மாதம் : கார்த்திகை

மலர் : 23 இதழ் : 11

குழந்தைகள் நலம் காப்போம்!

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!"

என்று குழந்தைகளுக்காகப் பாடினான் பாரதி! ஓடி விளையாடும் பருவத்திலேயே கூடி வளரும் – வாழும் பழக்கம் வளரவேண்டும் என்று ஆசைப்பட்டான் பாரதி! "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பார்கள்! நல்ல மண், நீர், காற்று, ஒளி, உரம், பயிர் வளர்வதற்கு அவசியப்படுவதைப் போலப் பெற்றோர், பள்ளி, ஆசிரியர், நண்பர், சூழ்நிலை, குழந்தைகள் உடலும் உள்ளமும் நலமாய் வளர்வதற்கு அவசியம்! தாயின் கருப்பையில் குடிஇருக்கும் பொழுதே குழந்தை தாயின் குருதியில் இருந்து உணவோடு உணர்வுகளையும் உள்வாங்கிக் கொள்கின்றது. அதனால்தான் கர்ப்பிணித்தாய் அச்சம், கோபம், கவலை, விரக்தி போன்ற உணர்வுகளுக்கு ஆட்படாமல் மகிழ்ச்சி, அன்பு, துணிவு, வீரம் முதலிய நல் உணர்வுகளுக்கு உரிய சூழலில் தம்மைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்! தாயின் கருப்பையில் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கும் குழந்தையைக் குடும்பம் தான் முதலில் செதுக்குகின்றது. குழந்தை பார்க்கும் முதல் உலகம் பெற்ற தாய், தந்தைதான்!

இறைவன் தங்களுக்குத் தந்த மலரை அர்ச்சனைக்குரியதாக ஆக்குகின்ற முதல் பெரும் பொறுப்பு பெற்றோர்களிடம் உள்ளது. குழந்தைக்குப் பெற்றோர்களே முதல் முன்மாதிரி. பெற்றோர்களிடம் இருந்து எல்லாவற்றையும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன! குழந்தைகள் முன்பு பெற்றோர்கள் சண்டை இடும்பொழுது குழந்தைகள் மனதில் நஞ்சு விதைக்கப்படுகின்றது. குழந்தைகள் விஷயங்களில் பெற்றோர்கள் ஒத்த கருத்தை, ஒத்த முடிவைச் சேர்ந்து எடுக்க வேண்டும். தவறினால் பெற்றோர்களின் முரண்பாடுகளை, குழந்தைகள் வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ளும். குடும்பத்தில் உள்ள முரண்பாட்டைக்

குழந்தை பயன்படுத்துகின்றது. ஒரு வயதுக் குழந்தைகூட இதைப் பயன்படுத்துகின்றது. தாய், தந்தை இருவருக்கும் இடையே இணக்கம் இல்லாமல் மறுக்கும் விசயத்தைத் தனக்கு வாய்ப்பாக குழந்தை பயன்படுத்திக்கொள்ளும். ஒற்றுமை இல்லாத பெற்றோர்களின் குழந்தைகளும் தமக்குள் கீரியும், பாம்பும் போல் சண்டை இட்டுக்கொள்கின்றன. அன்பும், மகிழ்ச்சியும் இல்லத்தில் நிலவுவதில்லை. இப்படிப்பட்ட குடும்பங்களில் வீட்டை விட்டு வெளியே இருக்கவே குழந்தைகள் விரும்புகின்றன. வீட்டை விட வீதி அந்தக் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. குழந்தைகள் வீட்டை விட்டு வெளியில் இருக்க விரும்புவதற்கான காரணம் குழந்தை மீது குற்றம் கண்டுபிடிப்பதும், திட்டித் தீர்ப்பதும், படி படி என்று நச்சரிப்பதும் வீட்டு வேலைகளை வாங்குவதும் போன்றவையாகும். வீதிகளில் இக்குழந்தைகள் தவறான வழிகாட்டுதலால் திசைமாறிய பறவைகள் ஆகின்றன! குடும்பங்களில் குழந்தைகளின் உள்ளங்களோடு உரையாட வேண்டும். அன்பின் அரவணைப்புடனும், தோழமையின் நெருக்கத்துடனும், குழந்தைகள் உணரும்படி உரையாடல்கள் நிகழ வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு உத்தரவுகளை இடாமலும், எதற்கும் இசைந்து "ஆமாம் சாமி" என்ற நிலையில் இல்லாமலும், குழந்தைகளுக்குத் தேவையான நல்ல முடிவுகளை எடுக்கப் பயிற்றுவிப்பது அவசியம். குடும்பம் அமைதியான, அன்பான, சூழ்நிலையில் எப்பொழுதும் இருத்தல் அவசியம். கல்வி உலகத்தைப் பொறுத்தவரை எத்தனையோ சத்துணவுத் திட்டங்கள் வந்தும் கூடக் "குழந்தைத் தொழிலாளர்" என்ற கொடிய நிலை காணப்படுகின்றது. Unicef கணக்கின்படி இந்தியாவில் 75-90 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். 14 வயதுக்கு உட்பட்டவரை பணியில் அமர்த்தக்கூடாது. கட்டாயக்கல்வி என எத்தனையோ சட்டங்கள் இருந்தும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒரு சதவீதம் கூடக் குறைக்க முடியவில்லை! நாடு 60 ஆண்டுகாலக் குடியரசை வெற்றிகரமாகக் கொண்டாடும் வேளையில் 73 மில்லியன் குழந்தைகள் வறுமையின் காரணமாகக் கொத்தடிமைகளாகத் தங்களின் கல்வி உரிமை இழந்து நின்கின்றார்கள். கொடுமைகளின் உச்சமாக இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து மேற்காசிய நாடுகளுக்கு 2 முதல் 5-வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனர்! எதற்கு? மேற்காசிய நாடுகளில் நடைபெறும் ஒட்டகப் பந்தயங்களில் (2 முதல் 5 வயதுக்கு உட்பட்ட) குழந்தைகளுக்கு என்ன வேலை? ஒட்டகங்களோடு சேர்த்து கயிறால் குழந்தைகள் கட்டப்பட்டிருக்கும். ஒட்டகங்கள் பந்தயத்தில் ஓட, ஓட குழந்தையின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறு இறுக ஆரம்பிக்கும்! வலி தாங்காமல் குழந்தை கத்த, கத்த ஒட்டகம் வேகமாக ஓடுமாம்! பந்தயத்தில் ஒட்டகங்கள் வேகமாக ஓட, குழந்தைகளின் அலறல், கதறல் தேவைப்படுகின்றது! பந்தய முடிவில் பல குழந்தைகள் பிணங்களாகவே ஆகிவிடுவது உண்டு. 1997 செப்டம்பரில் Free the children என்ற அமைப்பு, சென்னையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட இருந்த 38 குழந்தைகளைக் காப்பாற்றி இருக்கின்றது.

உலகம் முழுவதும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் 250 மில்லியன் குழந்தைகளில் 52.5 மில்லியன் குழந்தைகள் நம் தாய்த்திரு நாட்டின் செல்வங்கள்! குழந்தைத் தொழிலாளர் மசோதா – 1986 இன்று வரை முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா?

91/1

பலமான திட்டங்கள்தான்!

செயல் ஆக்கம்தான் தேவை!

இந்திய அரசு உயர்கல்விக்கு ஒதுக்குகின்ற நிதி ஒதுக்கீட்டின் தாராளத்தை, ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கீடு செய்வதில்லை. கேரளாவில் உயர்கல்வியைவிட தொடக்கக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்றனர். மத்திய அரசு கல்விக்கு ஒதுக்கும் நிதியை விட அதிகமாகவும், 11.5 சதவீதம் ஆரம்பக் கல்விக்கு என ஒதுக்குகிறது. கேரளாவில் கற்றோர் சதவீதமும் கணிசமாகக் கூடியது. குழந்தைத் தொழிலாளர்களும் குறைந்துள்ளர்! இதே நிலையை நாடு முழுவதும் தொடக்கக் கல்வியைக் கட்டாயக் கல்வியாகத் தீவிரப்படுத்தி குழந்தைத் தொழிலாளர் எனும் கொடியநிலையை குறைக்கலாம்.

வெடித்துச் சிதறும் பட்டாசுக் காகிதக்குப்பைகளில் குழந்தைகளின் அலங்கோல வாழ்வு தெரிகின்றது. பிரசோபாத்திச் கண்ணாடி வளையல் உருவாக்கும் பணியில் குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பு குறைவான கூலிக்கு உறிஞ்சப்படுகின்றது. கண்ணாடி வளையல்களை ஒட்டும் பணியில் ஈடுபடும் குழந்தைகளுக்கு இளைப்பு நோய், என்புருக்கி நோய் ஏற்படுகின்றது. பளபளக்கும் கண்ணாடி வளையல்களுக்குப் பின்னே உடைந்து உலுக்குலைந்து போய் இருக்கும் குழந்தைகளின் நல வாழ்வு, வாழ்வதற்கான உரிமை, சுகாதாரம், ஆரோக்கியம, பெயர் மற்றும் குடியுரிமை, சீரழிவு, வன்முறை, அலட்சியம் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்ப உரிமை கல்வி மூலம் பெறும் வளர்ச்சி உரிமை, ஆரம்பக் குழந்தைக் காப்பு உரிமை, ஓய்வு, பொழுதுபோக்கு உரிமை, கருத்துச் சுதந்திரம் எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமையைக் காப்போம்.

குருவி போல் பறந்துவா!
வண்ணப்பறவைப் போல்
வானில் வட்டமிட்டு வா!
கோழியுடன் கூடி விளையாடு!
கரையும் காகத்துக்கு இரக்கம் காட்டு!
நன்றி மறவா நாய் உன் தோழன்!
ஆடு, மாடு, குதிரைமீது அன்பு காட்டு!
படி! பாடு! விளையாடு!
பொய்யும், புறமும் ஆகாது!
தெய்வத் துணையால் தீங்கு என்றும் வாராது!
தீயோரை மிதித்து விடு!
சோம்பலைக் கொன்று விடு!
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!
என்று கொண்டாடு.

என்று எல்லாம் பாப்பாவுக்கு அறிவுறுத்தி இந்தியாவின் எல்லை காட்டி எல்லை நடுவே தொல்லை இல்லாமல் வாழ "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சமத்துவ தேசம் உருவாகக் குழந்தைகளிடம் சூள் உரைக்கின்றான் பாரதி! குழந்தைத் தொழிலாளர் இல்லாத தேசமும், குடும்ப வன்முறையால் பாதிக்காத குழந்தைகளையும் உருவாக்குவோம்!

அதுவே உண்மையான குழந்தைகள் தினம்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

93. கள்ளுண்ணாமை

கள் அறிவைக் கெடுக்கும்; உடல் நலத்திற்குத் தீங்கு செய்யும்; உறவைக் கெடுக்கும்; ஊரவர் கேண்மையைப் பாழ்படுத்தும்; திறன் மறைக்கும்; இன்பம் நீக்கும்; தீமை சேர்க்கும். ஆதலால் கள் குடியாதிருக்கும்படி திருக்குறள் வலியுறுத்துகிறது.

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழு வார். (921)

என்றும் கள்ளின் மேல் ஆசை கொண்டொழுகுவோருக்குப் பகைவர் அஞ்சார்; முன்பெயதிய புகழினையும் இழப்பர்.

கள் அறிவையும், ஆள்வினையையும் அழித்து விடுவதால் பகைவர் அஞ்சார். புகழுக்குரிய அறிவழிந்த ஆள்வினை அழிந்து பட்டதால் பழைய புகழும் கூட ஈட்டியதன்று. சந்தர்ப்ப சூழ்நிலையால் வாய்த்தது என்று எண்ணப்படுவதால் "ஒளியிழப்பர்" என்றார்.

உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். (922)

கள்ளை உண்ண வேண்டாம், "கள்ளை உண்டே தீர்வேன்" என்ற பிடிவாதம் பண்ணினால் சான்றோரால் மதிக்கப்படாநிலை தோன்றும் என்பதறிந்து உண்க.

திருவள்ளுவர் காலத்திலேயே கள்ளுண்ணாமைக்கு எதிரான சிந்தனையும் இருந்தது என்பது "உணில்" என்ற சொல்வழி உணரப்படுகிறது.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. (923)

ஈன்ற தாயின் முன் கள் குடித்து மயங்குதல் பொல்லாதது. அங்ஙனமாயின் சான்றோர் முகச்சுளிவைக் காணுமாறு குடிப்பது என்?

தாயின் முன் குடிமயக்கம் கூடாது என்றவாறு.

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. (924)

பேணுதற்குரியதல்லாத பெரிய குற்றமாகிய கள்ளை விரும்புவார்க்கு நாணம் என்ற நல்லாள் ஒதுங்குவாள்.

மனிதனொடு நாணம் என்ற நல்ல குணம் ஒட்டிக் கொள்ளப் போராடும். ஆனால் குடிகாரனிடத்தில் தோல்வியை ஒத்துக்கொண்டு ஒதுங்கும்.

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல் . (925)

கைப்பொருளைக் கொடுத்து உண்மை அறியாமையைக் கொள்முதல் செய்வது பழவினையின் காரணமாகச் செய்வதறியாது போனது போலும்.

தீமையை விலை கொடுத்து எவரும் வாங்கார் என்ற துணிவில் "பழவினை" என்றார்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (926)

உறங்குவாருக்கும் செத்தாருக்கும் இடையே வேறுபாடு இல்லை. அதுபோலக் கள்ளுண்பாருக்கும் நஞ்சுண்பாருக்கும் இடையேயும் எப்போதும் வேற்றுமை இல்லை.

சாதல் - பயனற்றுப் போதல்; கள்ளுண்பாரும் பயனற்றுப் போதலால் வேற்றுமை இல்லை என்றார்.

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவார் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். (927)

எப்போதும் கள்ளை மறைவாகக் குடிப்பவர் அவரையும் அறியாமல் கண்ணொளி மங்க அறிவு தடுமாறுவதைக் கண்டு உள்ளூரார், "இவன் கள்ளுண்டான்" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வர்.

கள்ளுண்ணாக் காலத்து இயல்பு அறிந்தார் உணர்த்த "உள்ளூரார்" என்றார். உடற்சார்பான ஒழுக்கங்களில் மறைவும், மறைத்தலும் பயன்படாது என்பதறிக.

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். (928)

குடியாத நிலையில் கள் குடித்துக் களித்தறியேன் என்று சொல்லற்க. கள் குடித்தமையை நெஞ்சத்தில் ஒளித்தமையை உடல் காட்டும்.

கள்குடி உடலை, அறிவை மிகுதியும் பாதிக்கும் என்பதனால் "கள் குடிக்கவில்லை" என்று கூறுவது நிற்காது.

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று. (929)

கள்குடித்துக் களித்து வாழ்வானை, களித்து வாழும் வாழ்க்கைக்குக் காரணமாகக் காட்டுதல், நீருக்குள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடினாற்போன்றது.

நீருக்குள் தீப்பந்தம் எரியாது; தேடுதல் இயலாது. கள்ளுண்ணல் களிப்பைத் தராது (மயக்கம் களிப்பல்ல). களிப்பைக் கொல்வது கள் என்று உணர்த்தியவாறு.

கள்ளுண்ணாப் போதில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. (930)

கள்ளுண்டு மயங்கிக் கிடப்பானை, கள்குடிப்பழக்கம் உடையான் - கள்ளுண்ணாநிலையில் காண மாட்டானா? அப்படிக் காணும் பொழுது கள்ளுண்டவன் பெற்றுள்ள சோர்வைக் கண்டு புத்தியைக் கொள்முதல் செய்ய மாட்டானா?

கள்ளுண்ட நிலையில் சோர்ந்து கிடக்கும் ஒருவனை, கள்ளுண்ணா நிலையிலும் காணும் குடிகாரன் கள்குடியின் தாக்கமாகிய சோர்வை உணரமாட்டானா?

(தொடரும்)

போரினால் அல்லலுற்று வாடும் இலங்கைத் தமிழர் துயர் துடைப்பு நிதிக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர். **கலைஞர்** அவர்களிடம் வணக்கத்திற்குரிய மகாசந்நிதானம் தவத்திரு **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** அவர்கள் ரூ. 100000/- ரூபாயை ஒரு லட்சத்திற்கான வங்கி வரைவோலை வழங்கியுள்ளார்கள். இலங்கைத் தமிழர் வாழும் பகுதியில் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதிச் சூழல் திரும்ப "மக்கள் சிந்தனை" இறைவனை இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

(ஆவணி – ஆகஸ்ட் 2008 இதழ் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கைநெறி

(புலவர். ச.மு. விமலானந்தம்)

8. சைவ சமயத் தத்துவம்

சாக்கியநாயனார் திருச்சங்க மங்கை என்ற ஊரில் தோன்றினார். அவரது குலம் வேளாளர் குலம். அவர் பிறவாப் பெருநிலை பெற முயன்றார். அதனால் அவர் காஞ்சி நகரத்துக்குச் சென்று பௌத்தரானார். பௌத்த சமய நூல்களை ஆராய்ந்தார். பிற சமய நூல்களையும் ஆராய்ந்தார். இறுதியில் "சிவ வழிபாடே பிறவிப் பிணிக்குப் பெரு மருந்து" எனத் துணிவு கொண்டார். "உண்மைப் பொருள் சிவனே" என்றும், "எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் சங்கரன் தாள் வணங்குவதே உண்மைப்பொருள்" என்றும் எண்ணிச் சிவபெருமானை உள்ளத்தால் வழிபட்டார். ஆயினும் பௌத்த கோலத்தை மாற்றிக்கொள்ளவில்லை. உள்ளம் மாறினால் போதும்; உடை மாற வேண்டுமோ?

அவர் நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்ட பிறகே உணவுண்டார். ஒரு நாள் சிவலிங்கத்தைக் கண்டார்; அவர் செய்வது இன்னதென அறியாது அருகிலிருந்த கல்லையெடுத்துச் சிவலிங்கத்தின் மீது எறிந்தார். அப்போது பேதைப் பிள்ளைகள் பெற்றோரைத் துன்புறுத்தும்போது, அறியாமையால் அவ்வாறு செய்தனர் என எண்ணி மகிழ்வது போல் எம்பெருமான் மகிழ்ச்சியுற்றார். அவர் "தாம் கல்லால் எறிவது சிவனருளே" என நாள்தோறும் சிவலிங்கத்தின் மீது கல்லால் எறிந்த பிறகே உண்டு வந்தார்.

ஒரு நாள் சாக்கிய நாயனார் சிவலிங்கத்தின் மீது கல்லெறிய மறந்து உண்ண அமர்ந்தார். உடனே நினைவு வர, "சிவலிங்கத்தின் மீது கல்லால் எறியாமல் உண்ண அமர்ந்தேனே" என எண்ணிச் சென்று சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்தார். அப்போது அவருக்குச் சிவபெருமான் காட்சி தந்து, தம் உலகத்தில் அடிமைத் திறத்தை அளித்து அருள் செய்தார். அன்போடு எறிந்த கல்லும் அலராயிற்று. (மலர் போல் மதிக்கப்பட்டது).

சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில்தான் சைவ சமயத் தத்துவத்தையும், சிவலிங்கத்தின் திருமேனியின் தத்துவத்தையும் விளக்கியுள்ளார். அவை வருமாறு:

வினை, அதைச் செய்பவன், அதனாலுண்டாகும் பயன், அந்தப் பயனைக் கொடுப்பவன் (இறைவன்) என நான்காக விதித்த பொருள்கள் சைவ நெறி அல்லாதவற்றுக்கு இல்லை. இந்தச் சைவ சமயத் தத்துவத்தை, "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று மணிவாசகர் சொன்னது போலச் சாக்கிய நாயனார் சிவன் அருளால் உணர்ந்தறிந்தார். இதனை விளக்கும் சேக்கிழார் செந்தமிழ்ப்பாடல் வருமாறு :

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையால் பொருள்சிவனென்று அருளாலே உணர்ந்தறிந்தார்"

இறைவனுக்கு உருவம் இல்லை; அவன் உருவிலி; ஆனால் அவன் அருவாகவும், உருவாகவும், அருவுருவாகவும் காணப்படுகிறான். அரு உருவமற்றது. கண்ணால் காணப்படாதது. உரு தெய்வத் திருமேனிகள் - விக்கிரகங்கள்; காணப்படுவன; அருவுருவம் லிங்கம். இது எச்சமயத்திலும் இல்லாத ஒன்று; சைவ சமயத்துக்குப் பெருமை சேர்ப்பது.

இதனை விளக்கும் ப ாடல் வருமாறு :

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"

சமயக் கல்வியில் உருவ வழிபாடு முதல் நிலை ; அருவுருவ (லிங்க) வழிபாடு இரண்டாம் நிலை (நடு நிலை) அருவ வழிபாடு (முடிவு நிலை) மூன்றாம் நிலை.

முதல் நிலையிலும், இரண்டாம் நிலையாகிய லிங்க வழிபாட்டையும் செய்த பிறகே மூன்றாம் நிலைக்குச் (அருவ வழிபாட்டுக்கு) செல்ல முடியும். அவ்வாறு நாம் சென்று உயர்வோமாக!

(தொடரும்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

புரட்சித் துறவி தவத்திரு குன்றக்குடி அடிகளார்

(மேதகு நீதியரசர். V. இராமசுப்பிரமணியன்)

இன்றைக்கு நாம் பத்திரிகையிலே பார்க்கிற செய்தி, ஆன்மிகம் தழைத்தோங்கி, ஆலயங்களிலே கூட்டம் அலைமோதுகின்றது என்று பார்க்கிறோம். ஆனால், கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளுக்கு முன்னால், ஆலயங்கள் என்பதிலேய ஒரு சில பிரச்சினைகள் ஏற்பட்ட காலக்கட்டத்திலே "அருள்நெறித்திருக்கூட்டம்" என்கிற அமைப்பைத் தொடங்கி, "ஆன்மிகம் என்பது இந்த நாட்டின் அடிப்படை. அதை இங்கே இருந்து பிரித்துவிட்டால், இங்கே வேறு எந்த வளர்ச்சியும் பெறமுடியாது" என்கிற கருத்தை ஆணித்தரமாக, எந்தக் காலக்கட்டத்திலே இங்கே எதிர்ப்பிருந்ததோ, அந்தக் காலக்கட்டத்திலே, எதிர்நீச்சல் போட்டுக் கொண்டுவந்தவர் அடிகளார் அவர்கள்.

அதுபோல், பலபேர் வாழ்க்கையிலே, பல செய்திகளை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்ல முடியும். ஆனால், தன்னுடைய வாழ்க்கைக்கு வருகிறபோது எந்த அளவிற்கு தான் சொல்லுகிற அறிவுரைகளை வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்த முடியும் என்று நினைக்கிறபோது, அப்படி நடைமுறைப்படுத்துகிறவர்கள் மிகச்சிலர்தான் என்பது புரியும்.

இன்றைக்கு நமக்கெல்லாம் படிப்பதற்கு ஏராளமான புத்தகங்கள், செய்திகள் இருக்கின்றன. ஆனால், அவற்றிலே எத்தனை சதவீதம் நாம், நம்முடைய வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்திப் பார்த்திருக்கிறோம் என்று பார்த்தால், ஒன்றும் தெரியாது. ஆனால், அடிகளார் அவர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள்.

ஒரு துறவு மனப்பான்மை எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு காலக்கட்டத்திலே இந்த உயிரை இழக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்பவன்தான் துறவியாக இருக்க முடியும். அடிகளார் அவர்கள் வாழ்க்கையிலே நடந்த

ஒரு நிகழ்ச்சியை இந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்கள். காரிலே அவர்கள் பயணிக்கிறார்கள். போகிறபோது ஒரு விபத்து நேரிடுகிறது. உள்ளே இருப்பவர்கள் எல்லாம் பதறுகிறார்கள். ஆனால், அடிகளார் அவர்கள் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறபோது, மிகவும் நகைச்சுவையோடு இரு செய்திகளைக் குறிப்பிடுகிறார்கள். "கார் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று அந்தக் காருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. எப்போதும் நான் தார்ச்சாலையிலேதான் போக வேண்டுமா? வயல்வழியிலே போனால் என்ன தவறு? என்று கார், ரோட்டைவிட்டு இறங்கிவிட்டது" என்று எழுதியிருக்கிறார்கள். முன்னாலே அந்தக் காரிலே வந்த நண்பர்கள் எழுதுகிறார்கள். "தாறுமாறாக ஓடி, வயல்வெளியிலே இறங்கி இரண்டு குட்டிக்கர்ணம் போட்டு அந்தக் கார் போய் முட்டி மோதிப்போய்ப் பின்னர் நின்றுவிட்டது". இப்படிப்பட்ட கார்விபத்தைப் பற்றி எழுதுகிறபோது, "அந்தக் காருக்கு ஒரு வேடிக்கையான எண்ணம் வந்துவிட்டது எப்போதும் ரோட்டிலேதான் போகவேண்டுமா?" என்று யாராவது ஒருவர் எழுத முடியுமா என்றால் அவர் உண்மையான துறவியாக இருந்தால்தான் எழுத முடியும். அதைவிட வேடிக்கை, "அந்த இடத்திலே நான் சொர்க்கத்தைக் கண்டேன்!" என்று அடிகளார் எழுதியிருக்கிறார். ஏன் அவ்வாறு எழுதியிருக்கிறார் தெரியுமா? அந்தக் கார் தாறுமாறாக உருண்டு ஓடத் தொடங்கியபோது உள்ளுக்குள்ளே இருக்கிற ஓர் அன்பர் கத்தியிருக்கிறார். அவர் கத்துகிறபோது, "சந்நிதானத்திற்கு என்ன ஆயிற்று?" என்று கவலைப்பட்டுக் கத்தியிருக்கிறார். அடிகளார் அவர்கள் எழுதுகிறார்கள். "அப்படிக் கத்திய அன்பருக்கு மனைவி இருக்கிறார். பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் என்னைப் பற்றி ஓர் ஆன்மா கவலைப்பட்டதே அந்த அன்பை நினைக்கிறபோது அங்கே சொர்க்கமில்லாமல் வேறு எங்கே இருக்கிறது?" என்று அடிகளார் கேட்கிறார். நீங்கள் நினைத்துப் பாருங்கள். இப்படி ஒரு சோகச் செய்தியை, இப்படி ஒருவர் பார்க்க முடியுமா? உண்மையான துறவியால்தான் பார்க்க முடியும். அதை முடிக்கிற போது அற்புதமான ஒரு செய்தியைக் கொண்டு முடிக்கிறார். "எங்களைப் பொறுத்தவரையிலே, எமன் இளிச்சவாயன் ஆகிவிட்டான்!" என்று. அந்த அளவிற்கு மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், ஒரு மனிதனால் நகைப்புக்குரியதாகப் பார்க்கமுடியுமென்றால், அவனைவிட உயர்ந்த துறவி உலகத்தில் இருக்க முடியாது.

சொர்க்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு அற்புதமான கதை உண்டு. ஒருவன் இறந்துபோனான். அவனை அழைத்துக் கொண்டு போனவர்கள் கேட்டார்கள். "நீ சொர்க்கத்துக்குச் செல்லவேண்டுமா? நரகத்துக்கா?". "சொர்க்கம் எப்படி இருக்கும், நரகம் எப்படி இருக்கும் என்று தெரியாது. அதைக்காட்டுங்கள்!" என்று சொன்னான். அந்த நரக அறைக்குள்ளே ஒரு வட்டமேசை, அதிலே பலவகையான அறுசுவை உணவு பரிமாறப்பட்டிருக்கிறது. அங்கே நாற்காலியிலே மனிதர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களது கைகளெல்லாம் விரித்த பலகையிலே வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே அவர்கள் கைகளை மடக்க முடியாது. நீட்டலாம். எனவே, ஒருவரும் சாப்பிட முடியாது. எமதூதன் சொன்னான். "இதுதான் நரகம். உனக்கு எதிரிலே நீ அனுபவிக்க வேண்டும் என்று நீ நினைக்கிற பொருள் இருக்கிறது. ஆனால், உன்னால் அனுபவிக்க முடியாது. இதுதான் நரகம்" "சரி சொர்க்கம் எப்படி இருக்கிறது?". அங்கேயும் இதுபோல் வட்டமேசை, நடுவில் அறுசுவை உணவு. அவர்களது கைகளும் இதுபோல் கட்டப்பட்டிருக்கின்றன. "ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லையே!" என்று அந்த மனிதன் சொன்னான். அப்போது அழைத்துக் கொண்டு போன எமதூதன் சொன்னான். ஐந்து நிமிடம் வேடிக்கை பார்? என்றான். அங்கே சொர்க்கத்திலிருந்த மனிதர்கள் மகிழ்ச்சியாக உண்ணத் தொடங்கினார்கள். எப்படி? கைகளை மடக்கத்தான் முடியாது. நீட்ட முடியுமே. மேசையின் இந்தப் பக்கத்திலே இருக்கிற மனிதன் அந்தப் பக்கத்திலே இருக்கிற மனிதனுக்கு ஊட்டுகிறான். அந்தப் பக்கத்திலே இருக்கிற மனிதன் இந்தப் பக்கத்திலே இருக்கிற மனிதனுக்கு ஊட்டுகிறான். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். உடனே, எமதூதன் சொன்னான். "இதுதான் சொர்க்கம். கையிலே உணவுப் பொருள் இருந்து உண்ணமுடியாமல் உண்ணவழி தெரியாமல், திக்கு முக்காடுகிறபோது, ஒருவன் நரகத்திலே இருக்கிறான். அடுத்தவனுக்குக் கொடுத்து, அதிலே ஆனந்தப்படுகிறபோது சொர்க்கம் அங்கே இருக்கிறது" என்று. அப்படிப்பட்ட அன்பை - தன்னோடு வந்த மனிதர் தமது மனைவி மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் தன்னைப் பற்றியும் கவலைப்படாமல், சந்நிதானம் எப்படி இருக்கிறார்கள் என்று கவலைப்பட அன்பை வேறு எங்கே பார்க்க முடியும்?

குன்றக்குடி கிராமம் முன்மாதிரியான கிராமமாக வளர்ந்துவிட்டது. அடிகளார் அவர்கள் தன்னுடைய திருப்பணியைத் தொடங்கியபோது இந்த ஊர் எப்படி இருந்திருக்கும்? இந்தப் புத்தகத்திலே என் மனதைக் கவர்ந்த ஒரு செய்தியை எழுதியிருக்கிறார்கள். இங்கே சுற்றுவட்டாரத்தில் இருக்கிற ஊர்கள், கிராமங்கள், சினிமாத் தியேட்டர்கள் இல்லாமல் மதுக்கடைகளே இல்லாமல் விளங்குகிற கிராமங்களாக உருவாக வேண்டும் என்பதற்கு அடிகளார் அவர்கள் எந்த அளவிற்கு முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, ஒவ்வொரு ஊரையும் இதுபோல் உருவாக்க வேண்டும். இந்த உலகத்திலே மிகப்பெரிய மாற்றங்கள் நாம் இருக்கிற இடத்திலே இருந்து உருவாக வேண்டும் என்கிற நோக்கிலே அடிகளார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். செய்திருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளைத் தவிர, அடிகளார் அவர்கள் போகாத நாடுகளே இல்லை. உலகத்தையெல்லாம் வலம் வந்த அடிகளார் அவர்கள், எங்கே இருந்து இந்த மாற்றத்தைத் தொடங்கினார்கள் என்று பார்த்தால், அடிப்படையிலே, தான் எந்த இடத்திலே, இருக்கிறோமோ அந்த இடத்திலே இருந்துதான் தொடங்க வேண்டும் என்று தொடங்கியிருக்கிறார்கள். அந்த மாற்றத்திற்காக விதைகளை இங்கே விதைத்திருக்கிறார்கள.

தமிழ்நாட்டிலே இருந்தபோதெல்லாம் அடிகளார் அவர்கள் மேற்கொண்ட பயணங்கள், மேற்கொண்ட முயற்சிகள் எல்லாவற்றையும் பார்க்கிறபோது ஆச்சரியமாக இருக்கிறது. மதநல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்காக அடிகளார் அவர்கள் எந்த ஒரு இடத்திலே மதத்தின் காரணமாகப் பூசல்கள் எழுந்ததோ, அந்த இடத்திலே ஒரு கிறித்தவரைக் கொண்டு இந்து ஆலயங்களைக் கட்டச் செய்வது, இந்துவைக் கொண்டு கிறித்தவ, சர்ச்சுகளைக் கட்டச் செய்வது இப்படியெல்லாம் ஒரு மதநல்லிணக்கம் இந்தச் சமுதாயத்திலே உருவாக வேண்டும் என்று அடிகளார் அவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள்.

இந்த நூலிலே, மண்டைக்காட்டு மதக்கலவரம் பற்றிச் செயல்பட்ட செய்திகளைப் போட்டிருக்கிறார்கள். அதிலே என்னைக் கவர்ந்த ஒரு செய்தி, மண்டைக் காட்டிற்கு மதநல்லிணக்கத்திற்கு அடிகளார் அவர்கள் பயணிக்கிறார்கள். அவர்கள் செய்த அந்தச் சாதனை, மகத்தான சாதனை. அதைப் பார்த்து ஒரு கவிஞர் கவிதை எழுதுகிறார்.

"மண்டைக்காட்டில், மதங்களின் வலிமையை
மண்டை ஓடுகளின் எண்ணிக்கையால்
மதவெறியர்கள் எண்ணிக்கொண்டிருக்கையில்
உம்மால்தான் பல மனிதப் படுகொலைகள் தடுத்து
நிறுத்தப்பட்டன.
கபால ஓடுகளையும் மனிதக்குருதியையும் அடையாளச்
சின்னமாய் அணிந்த
ஆயுதம் ஏந்திய வன்முறையாளர்களை அமைதி வழிக்குத்
திருப்பிய புதிய அகிம்சாமூர்த்தி நீர்தான்!"

என்று ஒரு கவிஞர் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு ஒரு கவிதை எழுதுகிறார். அந்தக் கவிதை எழுதியவர் யார் தெரியுமா? அந்தக் கவிதையை இயற்றியவர்தான் இன்றைக்குக் குருமகாசந்நிதானமாக இங்கே வீற்றிருக்கிற தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள்.

இப்படிப்பட்ட ஒரு சமுதாயப் பணியை, மாபெரும் கல்விப் பணிகளை,

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம்
நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர
நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்"

என்று பாரதி சொன்னாரே, எப்படிப்பட்ட புரட்சி! விவேகானந்தர், "கண்ணன் கூறிய கீதையைப் படிப்பதைக் காட்டிலும் கால்பந்து ஆடுவது மூலம் கடவுளருகே செல்ல முடியும்" என்று சொன்னாரே, அப்படி ஒரு புரட்சி, இந்தச் சமூகத்திலே பசிப்பிணி போகவேண்டும்; எல்லோரும் கல்வி கற்க வேண்டும்; பெண்கள் முன்னேற வேண்டும் இப்படிச் சமுதாயம் முன்னேறுவதற்கு ஆன்மிகம் அடித்தளமாக வேண்டும் என்பதற்கு ஒரு பாதையை வகுத்துக் கொடுத்தவர் தவத்திரு அடிகளார் என்கிற அளவிலே இந்த நூலை வெளியிடுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்ததற்காகவும் குருபூசை விழாவிலே கலந்து கொள்வதற்கும் அவர்களுடைய ஆசியைப் பெறுவதற்கும் வாய்ப்பினை வழங்கியதற்காகவும் நன்றி பாராட்டி அமைகின்றேன்.

(16.09.2008 செவ்வாய்க்கிழமை அன்று குன்றக்குடி ஆதீனக் குருபூசை விழாவில், சேதுபதி எழுதிய அற்புதத்துறவி அடிகளார் நூலை வெளியிட்டு ஆற்றிய உரை)

அருளாலய சீராளன்

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

செந்தமிழ்சேர் சிறுத்தொண்டர் புராணத்தில் சீராளன்
அந்தநாள் சின்னவன்தான்! ஆனாலும் அவன்தானும்
தெரிந்தோ தெரியாமலோ செய்திட்ட தியாகத்தால்
புரிந்துணர்வு மிக்கதொரு புண்ணியச் சீலனாய்
நாட்டுமக்கள் நெஞ்சில் நலமாய்ப் பதிந்தேதான்
கூட்டுக் குடும்பத்தின் குபேரத் தியாகத்தை
என்னவென்று காட்டுவதற்கு அவன்தந்தை தாயரைச்
[1]"சின்னமாய்" ஆக்கிவிட்டான் சிந்தை சிலிர்க்கவைத்தே!
மரணமிலாப் பெருவாழ்வு பெற்றஅச் சீராளன்
தரணியில் மீண்டும் பிறந்தானோ எனுமாறு
இதேந்திரன்தான் பிறந்திறந்து எல்லார் இதயத்தை
அதேபோலத் தொட்டுவிட்டான்! ஆனாலும் அந்தோ,
மருத்துவத் தம்பதியர் தாம்பெற்ற பெயர்க்கேற்பப்
பொருத்தமாய் அசோகன் புஷ்பாஞ் சலியென்போர்
சோகம் இருந்தாலும் [2]அசோகன் எனப்பட்டார்!
சாகக் கொடுத்ததாய் சாதுரியம் செய்திட்ட
மகனுக்காய் அஞ்சலியை மனமாரச் செய்ததினால்
சகம்புகழ் [3]புஷ்பாஞ் சலியென்றே பேர்கொண்டார்!
இறவாத இதயங்கொள் இதேந்திரத் தன்மகன்தான்
இறவாத நிலையில் உடலுறுப்பைத் தானமென
இன்னோர் உயிர்காக்கப் பெற்றோர் கொடுத்திடவே
பொன்னார் மனம்வந்த தெப்படியோ எனநானும்
சடம்போல் கிடந்திட்ட சத்திய தூக்கத்தில்
கடந்திட்ட ஞானியுமே குழந்தையிடம் அன்பு
கடப்பரோ என்றிட்ட கருத்தின் படியாக
நடந்தபடி என்முன்னே நற்றமிழ்கூ றடிகளார்தான்
வருபனி வார்த்திட்ட வாட்டமுறு கண்ணராய்நல்

வருகை புரிந்திட்டார்! உணர்ச்சிப் பெருக்கில்நான்
“சாமியிது சரியா?” கதறிப் புலப்பினேன்!
“பூமிபுகழ் காவிக்குள் கண்ணீரா? அந்தோ
கசிந்தேன்?” என்றிட்டேன், “கல்லுக்குள் ஈரம்
கசிந்திட்ட தென்றிட்டால் காவிக்குள் கசியாதோ?
கசிவதுதான் நேயமெனக்” கனத்த குரலோடு
கசிவாகச் சொன்னதுமே, “இதேந்திரன் வாழ்க்கையில்
கூறிட்ட அவனுடலின் உறுப்பைப் பிறருக்கு
மாறின்றிக் கொடுக்க அவன்தந்தை தாய்க்குத்தான்
வந்தமனம் எந்தமனம்?” என்றேநான் கேட்டதும்
“அந்தச் சிறுத்தொண்டர் வெண்காட்டு நங்கையுமே
கொண்டமனம்” என்றிட்டார்! இடைமறித்த நானுமே
கொண்டவரின் மேலிலையா இப்பெற்றோர் மனமென்றேன்
எவ்வா றெனக்கேட்டார்? “புராணத்துப் பெற்றோரோ
செவ்வையாய்த் தம்மகனைத் தாமேகூ றிட்டார்,
மருத்துவப் பெற்றோரோ பிறர்கூறு போட
“மருத்தமனத் தோடிருந்தார்” என்றழுத என்னை
அமைதி படுத்திட்ட அருட்டந்தை எந்தன்
இமைமூடித் திறப்பதற்குள் எல்லாம் மொழிந்திட்டார்!
“தேச நலனுக்காய் பலர்கொன்ற பரஞ்சோதி
நேச மகனை இழப்பாரா?” அவர்துணையாம்
வாசமலர் மனைவியும் ஒப்புவரா? எனக்காண
ஈசன் பைரவராய் வேடமிட்ட கதைசொல்ல
சேக்கிழார் துடித்த துடிப்பைஎன் சொல்வதுவோ?
பாக்கியம் பெற்றதாய் வெண்காட்டு நங்கையவர்
தேக்கிய துக்கமெலாம் தொண்டைக்குள் இருந்தாலும்
ஆக்கியதன் மகன்கறியை அரன்உண்ணும் முன்பாகத்
தந்தை விரைந்துண்ண பார்த்த சிவனார்தான்
“சிந்தை மகிழ்ந்து” சிறுபிள்ளை உண்டன்றோ?
அழைத்திடுமின் உண்பமென” அடிமேல் அடியாகக்

குழைந்திட்ட சோதனைகள் வந்தாலும் வாடாமல்
அன்றையநல் இதேந்திரச் சீராளப் பெற்றோர்கள்
நன்றே புராணத்தில் நற்புகழ் பெற்றதுபோல்
இன்றையச் சீராள இதேந்திரப் பெற்றோர்கள்
வென்றுகாட்டி விட்டதாய் வீறுதமிழ் அடிகளாரும்
இதேந்திரன்நல் இதேந்திரன்தான்! என்றுமவன் சிரஞ்சீவி!
[5]இதோஉப தேசம்போல் இன்னும் அடுக்கினார்,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்
தாய்ஆண்டாள் சொன்னதுபோல்,இவன்தந்தை என்நோற்றான்
என்றையன் சொன்னதுபோல், வாழ்ந்த இதேந்திரன்
இன்றுதாய் தந்தைக்குப் புகழ்சேர்த்தான்" எனப்புகழ;
"மரணமில்லாப் பெருவாழ்வு என்றுரைத்த வள்ளலாரின்
அரணான வாய்மொழிக்கு வரலாற்றுச் சான்றாக
இதேந்திரன் வாழ்வுதான் ஆகுமா?" எனக்கேட்டேன்,
"இதேந்திரனின் உறுப்படைந்தோர் தோற்றுவிக்கும் வாரிசு
வாழையடி வாழையாக வழிவழிஇவ் வையகத்தில்
ஊழையே வென்றுவிடும் உண்மைவாழ்வைப் பெறுவதினால்
மரணமிலா என்பதற்குப் புத்தம் புதுவிளக்கம்
தரணிபுகழ் இதேந்திரன் தந்துவிட்டான்" எனக்கேட்டு
[6]உவகைக் கலுழ்ச்சியில் உள்ளந் தடுமாறித்
தவத்திருவாம் அடிகளின் தாள்பற்றித் தலைவைக்கத்
தாவிஎழ முயற்சித்தேன் தண்ணரு ளாலயக்
காவிக்கல் படியில் கிடந்திட்ட நானுமே
பூசைமணி கேட்டுப் பொலிவாகக் கண்விழித்தே
ஆசையுடன் அருளா லயத்தின்சீ ராளனென
இந்த இதேந்திரனை இதயத்தால் வாழ்த்தினேன்,
நைந்துருகும் அவன்பெற்றோர்ச் சேர்த்து!

---

*1. அடையாளமாய், 2. சோகம் இல்லாதவர். 3. மனமாகிய மலரால் அஞ்சலி செய்தவர். 4. செயலற்ற 5. இதமாகச் சொல்லும் உபதேசம் போல. 6. மகிழ்ச்சியும் கலக்கமும் சேர்ந்த

ஒன்றாக நல்லது கொல்லாமை

(முனைவர். யாழ். சு. சந்திரா)

சங்கம் கண்டு தமிழ் காத்து, தங்கக் கமலம் கண்டு அதன் தரம்காத்த ஆலவாய் அண்ணலையும் அங்கயற்கண்ணம்மையையும் வணங்குகின்றேன்.

திங்கள்தோறும் நடைபெறும் சிந்தனை நந்தவனத்தில் எம் போல்வாருக்கும் வாய்ப்பு நல்கிய திருப்பெருந்திரு அடிகளாரின் பொன்னார் திருவடியை வணங்கிப் பணிகின்றேன். கூடியிருக்கும் பெரியோருக்கும் சான்றோருக்கும் தாய்மாருக்கும் எனது பணிவான வணக்கங்கள்!

பாடத்திட்டத்திற்குள் மட்டுமே பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில், புதியதொரு பாதையில் சிந்தனை நந்தவனத்துக்குள் உலாவ அழைப்பாணை, திருமடத்தில் இருந்து வந்தபோது உடனடியாகச் சம்மதித்தேன்; உங்கள்முன் நிற்கின்றேன்.

சிற்பிக்குச் சிலை வடிப்பதே நோக்கம். உழவனுக்குக் காடுகளைக் கழனியாக்குவதே நோக்கம். திருவள்ளுவருக்கு மனிதனை - மனித சமுதாயத்தை வளர்ப்பதே நோக்கம்! என்பார் அருள்நெறித்தந்தை!

ஆம், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் பழந்தமிழர் வீரப்பண்பாடு உடையவராக விளங்கினர்; வேலும், வில்லும், வாளும் ஏந்தி வீரம் விளைத்தனர். ஓரம்பில், ஏழு விலங்குகளைத் துளைக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். அவ்விறல் வீரர்களுள் ஒருவர்தான் வல்வில் ஓரி! ஆற்றல்மிக்க மன்னன்! வல்லாண்மை மிக்க வள்ளல்!

இறந்து பிறந்தாலும் பிறந்து இறந்தாலும் தமிழ்மக்கள் வாளால் அரிந்தனர். வாளால் கீறிய காயமும், வெளிப்படும் உதிரமும் அவர்தம் வீரத்துக்கு வெளிச்சமிட்டன. ஆகவேதான் உலக இலக்கியங்களை

ஒருங்கு வைத்துத் தமிழாய்ந்த இலங்கைத் திறனாய்வாளர், கைலாசபதி, பழந்தமிழர் பண்பாடு வீரப்பண்பாடு என்றார்!

அப்பழந்தமிழ்ப் பண்பாட்டின் எச்சமாக, வாளால் அறுத்து உதிரம் வெளிப்படுத்தும் முறைமையின் வெறுஞ் சடங்காக இன்று, தமிழ்மரபில் "காதுகுத்துதல்" சுருங்கிப் போயிற்று எனலாம்.

பழந்தமிழ் இலக்கியத்தை அடுத்து எழுந்த குறள் புதுநெறி காட்டியது! வள்ளுவம் வகுத்த பாதை வல்லாண் பாதையன்று! வாய்மை சுட்டும் வழி! அறம் கூட்டும் நல்வழி! மாந்தரினத்தை மேம்படுத்தும் உன்னதவழி! அவ்வழியில் பொய்யாமை இல்லை! கள்ளுண்ணும் கரவில்லை; கொல்லாமை இல்லை!

இறைவனை ஒருருவம், ஒருபெயரின்றி வழுத்திய வள்ளுவப் பெருந்தகை, அறத்தின் வடிவமாய்ப் போற்றுகிறார். "அறவாழி அந்தணன்" என ஏத்துகின்றார்.

அறவினை யாது? என வினா எழுப்பி, "கொல்லாமை" என விடையிறுத்து, அதுவே, பிறவினைகளை எல்லாம் நல்கும் எனச் சுட்டுவார்.

வீரம் விளைந்த தமிழ்மண்ணில் அறம் விளைக்க வித்திடுகிறார். தனக்குத்தானே வினா எழுப்பி, நம் போல்வாருக்கு விடையிறுப்பது போன்று,

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று!"

என்பார்.

பொய்யாமையே - வாய்மையே அறத்திற்கு எல்லாம், அணிசெய் முதன்மைத்து எனப் பேசுவார் செந்நாப்போதார்!

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று!"

எனவும்

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

எனவும் இரு இடங்களில் பொய்யாமையைப் புகலும், வள்ளுவர், "கொல்லாமை"யை அதற்கும் முன்னிலைப்படுத்துவது ஏன்? இந்த வினாவிற்கு அதிகாரத்தின் பிற குறட்பாக்கள் விடையை விளைக்கின்றன எனலாம்.

நல்வழியாக விளங்கும் கொல்லாமையே அறங்களில் தலையாயது என்பார். வள்ளுவர் கூறும் கொல்லாமை பிற மனிதர்களை மட்டுமன்று; பிற உயிர்களையும் ஆம்! ஆகவேதான், "பரிமேலழகர், "யாதொன்றும்" என்றது, ஓரறிவையும் அகப்படுத்தியது!" என்று உரைக்கின்றார்.

உலகப் பற்றுக்களை முற்றாகத் துறந்தவரும் கூட, கொல்லாமை அறத்தைப் பின்பற்றுவாரின் பின்னேதான் நிற்பர். அவருக்கு, உயிருண்ணும் கூற்றும் அருகில் செல்ல அஞ்சும்! அதாவது, சாவாமை - நிலைத்த பேறு கொல்லாமை அறம் புரிவாருக்கு உண்டு என்பார்.

அறிவியல் முறையிலும், இவ்வறச் செயலுக்கு, விளக்கம் தர முயலலாம். உயிர்களைக் கொன்று ஊன் உண்ணும்பழக்கம் அற்றவர், நீளாயுள் பெறுபவர் ஆவர். இதனைத்தான்,

"கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்பார். பிறிதோரிடத்தில், "கொல்லாமை" அருள் என்றும், அவ்வூன் தின்னல் பொருளன்று! எனவும் உரைப்பார். "கொன்றால் பாவம் தின்றால் போச்சு!" எனும் வடவாரியர் கொள்கைக்குப் பதிலாக,

"தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"

எனப் புதுநெறி காட்டுகிறார். எதன் பொருட்டும் கொல்லுதலை மறுக்கின்றார். கொலை செய்வாரைப் புலைவினையர் என வள்ளுவர்,

நாகரிகமாகச் சுட்ட, தமது உரையில் மணக்குடவர் "கன்மசண்டாளர்" என்பார்.

தம் பொருட்டுக் கொன்றால் தவறு; இறைபொருட்டுக் கொன்றால் பேறு; என்பார் தம் ஆரிய நெறியை யாக வழியைச் சுட்டும், வள்ளுவர் மனம் போற்றத்தக்கது.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்கு
கொன்றாகும் ஆக்கம் கடை"

என்ற குறளின் விளக்கவுரையாக, "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" எனப் பிறிதொரு குறளே விளங்குவது, அறிந்து இன்புறத்தக்கது.

யாகத்தையும், அவிப்பலியையும் விலக்கிய சமண, பௌத்தக் குரலாக, இக்குறள்கள் ஒலிக்கின்றன எனலாம்.

வடவாரியர்தம் கொள்கைக்கு மாற்றாக, மேலாகப் பழந்தமிழர் கொள்கைச் சார்பினை இவ்வதிகாரம் வழி, வள்ளுவர் காட்ட முற்படுகிறார் எனலாம்.

தன்னைக் கொல்ல வருவது பசுவாக இருப்பினும் கொல்லலாம் என வடவர் நெறி காட்ட,

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க; தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

எனப் புதுநெறி காட்டும் வள்ளுவம்! அப்புதுநெறியில் சென்றதால் அல்லவோ, சிபிப் பேரரசன், இந்திய ஆன்மிக உலகிலும், அற உலகிலும் முன்னர் நிற்கின்றான்.

ஆயுதமேந்திக் கொல்லுதலைக் கொள்ளாமை மட்டும் அறமன்று; உயிரைக் கொல்லும் உணவின்மையைக் கொல்லாமையும் அறமன்று என்பது, வள்ளுவர் வாய்மொழி! ஆம்! ஒன்பது குறள்களில், உயிர்க்கொலையை வெறுத்தொதுக்கும், வள்ளுவர், உயிரிழப்புக்குக் காரணமான பசிக்கொடுமை

நீக்குதலையும் - உயிர் வளர்க்கும் உணவுப் பங்கீட்டையும் கொல்லாமை அறத்துள் ஒன்றாக்குகிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என உணவுப் பகிர்மானத்தை - உயிரோம்புதலை கொல்லாமை அறத்தின்பாற்படுத்துகிறார்.

கைக்கொள்ள வேண்டிய அறத்துள் வாய்மையை முதலாகவும், புறந்தள்ள வேண்டிய அறத்துள் கொல்லாமையை முதலாகவும் கொண்டு வள்ளுவர் வகுக்கும் நெறி, பழந்தமிழர் நெறி! அவரை ஆன்றோராக்கும் அறநெறி!

உயிர்க்கொலையை உண்பதால் நேர் செய்யும் முறைகளை இன்றைய அறிவியல் சமூக ஆர்வலர்களும் வெறுத்தொதுக்கின்றனர். உணவிற்காக மிகையான உயிர் உற்பத்திப் பெருக்கம், சுற்றுச்சூழலில் "மீதேன்" பெருக்கத்திற்குக் காரணமாகி, புவிவெப்பத்தை மிகுதிப்படுத்துகிறது! ஆகவே, "சைவ உணவிற்குத் திரும்புங்கள்" என்ற புதுநெறி அமெரிக்காவில் வரவேற்புப் பெறுகிறது என்பது அண்மைச் செய்தி!

ஆக, வள்ளுவர் கூறும் "கொல்லாமை" புறந்தள்ளும் நெறிகளுள் முதன்மையானது; நலம்தரும் என யாகமும், பலியும், ஊனுண்பதும் கூடச் சரியன்று; கொல்லாமை அறம் கொள்வாரை அஞ்ச, கூற்றமும் அஞ்சும்; உலகத்தாருள் முன்னணியில் நிற்பர்! அத்தகு அறத்தைக் கைக்கொண்டு நாமும் நல்வழியில் சென்று, புவிசீருற - செழித்தோங்க ஒன்றிணைவோம்!

(18/10/09 குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் திருப்பெருந்திரு பொன்னம்பல அடிகளாரின் தலைமையில் "சிந்தனை நந்தவனம்" அமைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம்)

வீரத்தொண்டு – விவேகத்தொண்டு

(கவிஞர். அ.சொ. சண்முகம்)

மக்கள் சிந்தனை படித்து முடித்தேன்
மயங்கும் செய்தியால் உள்ளம் துடித்தேன்
பக்கம் ஏழாய் அமைந்த கட்டுரை
பார்த்த போழ்தே கண்ணீர் வடித்தேன்.

சேது பதியின் அருமைத் தொகுப்பால்
ஹிதேந்திர உயிரின் இதயம் படிக்கையில்
பாது காப்புடன் இளைஞர்க ளெல்லாம்
வண்டி ஓட்டுதல் நலமென நினைத்தேன்.

அன்புச் சோதரர் மருத்துவர் அசோகன்
ஆருயிர் துணைவி புஷ்பாஞ் சலியுடன்
துன்பம் மிகவே சூழ்ந்த போதிலும்
துணிந்த செயலை மனதில் நிறைத்தேன்.

இதயம் துடிப்புடன் இருக்கும் போதே
யார்தான் அறுக்கச் சம்மதிப் பார்கள்
பதமுற உதவும் இவர்களைப் போலே
உலகில் யார்தான் இனிப்பி றப்பார்கள்.

பிள்ளையை அறுத்த பரஞ்சோ தியார்க்கு
பரமன் பிள்ளையை மீண்டும் அளித்தான்
இல்லை யெனாத இத்தம்பதி யர்க்கு
இறைவன் இதுபோல் மகவைக் கொடுப்பான்

அசோகன் இணையர் ஆற்றிய பணிக்கு
அடிகளின் திருநீறு ஆறுதல் அளிக்கும்
விசாக நன்நாள் சண்முகன் அருளால்
வீரத் தொண்டாய் விண்ணில் ஒலிக்கும்

திருக்கயிலாயம் சென்றுவந்த

சிவத்திரு. **பழ. தரும. ஆறுமுகம் – திருமதி. பத்மாஆறுமுகம்**

இணையருக்கு

வரவேற்பு – பாராட்டு

குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனச் சார்பில் 17.10.2008 பிற்பகல் 3 மணியளவில் திருக்கயிலாயம் சென்று வந்த கோவை - சரவணம்பட்டி சிவத்திரு பழ.தரும. ஆறுமுகம் அவர்களுக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. பத்மா ஆறுமுகம் அவர்களுக்கும் திருவருள்திரு குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்ம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் வரவேற்பு - பராட்டு விழா நடைபெற்றது.

அது போது "அறநெறியண்ணல்" சிவத்திரு. **ப. மூக்கப்பிள்ளை**, காசிஸ்ரீ **சுப. முத்துப்பழனியப்பன்**, பிள்ளையார்பட்டி **கோவிந்தானந்த சுவாமிகள்** ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் சிவத்திரு **பழ.தரும. ஆறுமுகம்** அவர்களுக்கும் - திருமதி. **பத்மா ஆறுமுகம்** அவர்களுக்கும் "கயிலைமாமணி" என்னும் பட்டம் வழங்கிப் பட்டயம் அளித்துப் பொன்னாடை போர்த்தியும் மலர்க்கிரீடம் சூட்டியும் மாலைகள் அணிவித்தும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிவத்திரு. பழ.தரும. ஆறுமுகம் அவர்கள் ஏற்புரை வழங்கினார். திரு. **சு. செல்வராசு** அவர்கள் நன்றி நவில மங்கல வாழ்த்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா

உலகத் திருக்குறள் பேரவையின் புதுக்கோட்டை மாவட்டக் கிளையின் சார்பில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் சிலட்டூர் நல்லாசிரியர் தெய்வத்திரு. வெங்கட்ராமன் அவர்களின் நினைவுக்கூட்டமாக நடைபெற்றது.

கூட்டத்தினைக் குறளிசை பாடி, திரு ஹரிமோகன் தொடங்கி வைத்தார். கவிராசன் இலக்கியக் கழகத் தலைவர் கவிஞர் கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். இலுப்பூர் ஸ்ரீ பாரதி ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திரு. ஞானசுந்தரத்தரசு தலைமை வகித்தார். உலகத் திருக்குறள் பேரவையின் பொதுச்செயலாளர் திரு. மலையப்பன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் "காந்தியக் காதலன்" என்னும் தலைப்பில் அறிமுகப் பேச்சாளர் செல்வி. திலீபாவும், "மகாத்மா எனும் மனிதர்" எனும் பொருளில் சிறப்புப் பேச்சாளர், பாரதிதாசன் பல்கலைக் கழக கௌரவ விரிவுரையாளர், திரு. வேலாயுதராஜாவும் உரையாற்றினர். விழா நிறைவாக, சென்ட்ரல் ஜேஸி தலைவர் திரு. முருகபாரதி நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளைக் கவிராசன் குடும்பத்தினர் செய்திருந்தனர். கூட்டத்தில், ஆலங்குடி ராமச்சந்திரன் செட்டியார், ந.ராமச்சந்திரன், வேதையன், கவிஞர். மு.பா. கவிஞர் மகா சுந்தர், தனபதி, சங்கமித்ரா, லூர்து மேரி, விஜயலெட்சுமி, முனைவர் பழனியப்பன், காசிநாதன், சிறுதொழில் அதிபர் சங்க நிர்வாகிகள் ராஜ்குமார், முரளிதரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஜார்ஜ் அடிகளாரின் மறைவு

(அமுதன் அடிகள்)

கலைமாமுனிவர் என்றும் கலைஞானி என்றும் கலைக்காவலர் என்றும் சாதி, சமய வேறுபாடுகளின்றி அனைவராலும் போற்றப்பட்ட பேரருள்திரு. எஸ்.எம்.ஜார்ஜ் அடிகளார் இன்று நம்மிடையே இல்லை என்பதை நம்மால் இன்றும் நம்ப இயலவில்லை. அவருடைய புன்னகை பூத்த முகமும் அனைவருடனும் பண்புடன் பழகும் பாங்கும் ஏழை எளியோருக்கு இல்லையென்னாது உதவும் வள்ளன்மையும் உடல் உள்ளத்தோடு சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருந்த பான்மையும் நம்மால் மறக்கப் பாலன அல்ல.

குன்றக்குடி மடத்தின்மீதும் மறைந்த சமுதாய மாமுனிவர் குருமகா சன்னிதானம் அவர்கள் மீதும் தவத்திரு. பொன்னம்பல அடிகளார்மீதும் அவர் கொண்டிருந்த பற்றும் பாசமும் கடந்த அவரது சான்றாண்மையை எடுத்தோத வல்லது. அவ்வாறே பெரிய அடிகளாரும் பொன்னம்பல அடிகளாரும் ஜார்ஜ் அடிகளார்மீது கொண்டிருந்த பற்றுதல் அனைவரும் அறிந்த ஒன்று. அதனால் திருமடத்தின் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளிலும் ஜார்ஜ் அடிகளார் தவறாமல் கலந்து கொள்வார். அடிகளாருக்கும் ஜார்ஜ் அடிகளாருக்குகிடையே நட்பு துளிர்க்கத் தொடங்கிய ஆண்டு எனக்கு நினைவில் இல்லை. ஆனால் அந்தச் சந்தர்ப்பம் நன்றாக நினைவில் உள்ளது. திருச்சிராப்பள்ளி புனித வளனார் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற முனைவர் ச.சாமிமுத்து ஐயா அவர்களுக்கு மணிவிழா கொண்டாடுதல் பற்றித் திருச்சிராப்பள்ளி வாழ் தமிழ்ப் பற்றாளர்கள் பலர் கலைக்காவிரியில் கூடிக் கலாந்தாலோசித்த போது, மணிவிழாவைக் கலைக்காவிரி வளாகத்தில் கொண்டாடுவதெனவும் அதற்குத் தலைமை தாங்கத் தவத்திரு பெரிய அடிகளாரை அழைப்பதெனவும் முடிவு செய்தோம். அவ்வாறே விழா நடந்தது, அடிகளார் தலைமையேற்றார்கள். ஜார்ஜ் அடிகளாரின்

எளிய மனமும் அனைவருடனும் இனிதாகப் பழகும் பான்மையும் கவின்கலைகளாகிய இசை, நாட்டியம் ஆகியவற்றின் மீது அவருக்கு இருந்த பற்றுதலும் பெரிய அடிகளாரின் மனதைக் கவர்ந்தன. மணிவிழாவில் தலைமையுரையாற்றிய போது அடிகளார் இவை பற்றியெல்லாம் குறிப்பிட்டு, அவ்விழாவில் கலைக்காவிரி நிகழ்த்திய கலைநிகழ்ச்சியின் அருமையினைப் பாராட்டிப் பேசியது இன்றும் என் நினைவில் உள்ளது. குன்றக்குடி மடத்தோடும் தவத்திரு. அடிகளாரோடும் அன்று தொடங்கிய உறவும் நட்பும் பின்னர் பொன்னம்பல அடிகளாரோடும் தொடர்ந்தது.

அந்த உறவின் வலிமைதான் கலைக்காவிரி கல்லூரிக்கு அரசு மானியம் வழங்க வேண்டுமெனக் கலைஞரிடம் பரிந்துரை செய்யப் பொன்னம்பல அடிகளாரைத் தூண்டியது எனலாம். பெரிய அடிகளாரால் தொடங்கப் பெற்ற உலகத் திருக்குறள் பேரவையின் இன்றைய தலைவராகிய பொன்னம்பல அடிகளார் உலகத் திருக்குறள் பேரவையின் மாநாட்டைத் திருச்சிராப்பள்ளியில் நடத்திய போது நிறைவு விழாவில் முதல்வர் கலைஞர் கலந்து கொண்டார். அவ்விழாவில் கலைக்காவிரி நடத்திய அற்புதமான நாட்டிய நாடகம் முதல்வரின் கருத்தைக் கவர்ந்தது. நிகழ்ச்சியின் போதே கலைத் துறையின் வளர்ச்சிக்காகக் கலைக்காவிரி ஆற்றிவரும் பணிகளைப் பற்றி ஜார்ஜ் அடிகளாரிடமும் பொன்னம்பல அடிகளாரிடமும் கலைஞர் விரிவாகவே கேட்டுத் தெரிந்துகொண்டார். பின்னர் ஜார்ஜ் அடிகளாரின் வேண்டுகோளை ஏற்றுக் கலைக்காவிரியின் பணிகளைப் பற்றித் தமது சிறப்புரையின் போது பொன்னம்பல அடிகளார் எடுத்துரைத்து, உலகின் பல நாடுகளுக்கும் கலைக்காவிரி சென்று நடத்தும் கலை நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கி, இத்தகைய அரும்பணியாற்றும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் நிதி நெருக்கடியைத் தீர்க்க உதவி செய்யும் வகையில் கலைக்காவிரிக்கு அரசு மானியம் வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதாக விழா மேடையிலேயே கலைஞர் அறிவித்தபோது விழாவில் கலந்துகொண்ட அத்தனைப் பேரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி, கலைஞருக்கு நன்றி தெரிவித்த நிகழ்ச்சி திருச்சிராப்பள்ளிக் கலைஆர்வலர்களால் மறக்கற்பாலதன்று.

மிக எளிமையான முறையில் திருச்சிராப்பள்ளி ஆயர் இல்லத்தின் ஓர் அறையில் 1977-ஆம் ஆண்டு ஜார்ஜ் அடிகளாரால் தொடங்கப் பெற்ற கலைக்காவிரி அவரது தெளிவான சிந்தனையாலும் திட்டமிடுதலாலும் தீர்க்கமான செயல்பாடுகளாலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஒரு நுண்கலைக் கல்லூரியாக இன்று பொலிவு பெற்றுள்ளது. தொடக்கத்தில் கலைநிகழ்ச்சிகளை மட்டும் நடத்திக் கொண்டிருந்த கலைக்காவிரி, பின்னர் இசைக்கும் நாட்டியத்துக்குமுரிய சான்றிதழ் வகுப்புகளைப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஒப்புதலோடு நடத்தத் தொடங்கியது. இன்று இசை, நாட்டியம் ஆகிய துறைகளில் முனைவர் பட்டம் வழங்கும் அளவுக்குக் கலைக்காவிரி வளர்ந்துள்ளமைக்கு முக்கிய காரணம் ஜார்ஜ் அடிகளாரே என்பதில் ஐயமில்லை.

கர்நாடக இசையும் பரதநாட்டியமும் சமுதாயத்தில் மேட்டுக்குடி மக்களுக்கே உரியவை என்னும் பொய்யான கருத்தைத் தகர்த்தெறிந்து, அதை ஆர்வமுள்ள அனைவரும் குறைந்த செலவில் பயில வாய்ப்பளித்ததன் மூலம் இக்கலைகளை மக்கள் கலைகளாக்கிய பெருமை ஜார்ஜ் அடிகளாருடையது.

கலைக்காவிரியின் பெருமை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் பரவியதால் தங்கள் ஊர்களில் கலைநிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமெனப் பலரும் அழைத்தனர். பல நாடுகளிலிருந்தும் அவ்வாறே அழைப்புகள் குவிந்தன. கலைநிகழ்ச்சி நடைபெறவிருக்கும் மாநிலத்துக்கும் நாட்டுக்கும் ஏற்ற வகையிலும் அவரவர் மொழியிலும் கலைநிகழ்ச்சிகளைத் தயார் செய்து வழங்குவதில் ஜார்ஜ் அடிகளார் காட்டிய கவனம் போற்றுதற்குரியது. இதனால் பல மொழி பேசும் இந்திய மக்களும் வெளிநாட்டு மக்களும் தத்தம் மொழியிலும் பண்பாட்டுப் பின்னணியிலும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு பயன்பெற அவர் வழிவகுத்தார். அதன் விளைவாகப் பல இடங்களிலிருந்தும் திரும்பத் திரும்பக் கலைக்காவிரிக்கு அழைப்புகள் குவிந்தன. தம் கல்லூரி மாணவர்களும் பேராசிரியர்களும் கலைஞர்களும் எத்தகைய

இடர்ப்பாடும் இல்லாமல் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்ததில் ஜார்ஜ் அடிகளாரின் மனித நேயம் தெளிவாகப் புலப்பட்டது.

மனிதர்களை மனிதர்களாகவே கருதி மதிப்பது ஜார்ஜ் அடிகளாரின் பண்பாடு. ஆகவே தமது அல்லாது தாம் சார்ந்த சமயத்தின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் மதித்துக் கல்லூரிக்கு அழைக்க அவர் தயங்கியதில்லை. கலைக்காவிரி விழாக்களில் கலந்து கொள்ளாத அறிஞர்கள், கலைஞர்கள், பெரியோர்கள் தமிழகத்தில் இல்லை என்று சொல்லுமளவுக்கு அடிகளார் பலரையும் கல்லூரிக்கு அழைத்திருந்தார்.

கலைக்காவிரி நிகழ்ச்சியின் கலைச்சிறப்பு மட்டுமல்ல, செய்தொழில் திறனும் பலரால் பாராட்டப்பட்டது. நிகழ்ச்சிகளை நீண்ட காலத்துக்கு முன்பாகவே திட்டமிட்டு அமைத்து, ஒத்திகை நடத்தி, நிகழ்ச்சிகளை நூற்றுக்கு இருநூறு விழுக்காடு வெற்றிபெறச் செய்வதில் அவருக்கு நிகர் அவரே. ஜார்ஜ் அடிகளாரின் மறைவில் மனித நேயமும் ஆற்றல் சிறப்பும் நிறைந்த ஒரு மாமனிதரை நாம் இழந்துவிட்டோம் என்பதில் ஐயமில்லை.

ஜார்ஜ் அடிகளாரின் இறுதிநிகழ்ச்சிகளில் அமைச்சர்களும் திருச்சிராப்பள்ளி மாநகர மேயரும் பலதுறைப் பெரியோர்களும் அறிஞர்களும் கலைஞர்களும் பொதுமக்களும் என ஆயிரக் கணக்கானோர் நேரில் வந்து மரியாதை செலுத்தி அவருக்குப் பிரியாவிடை செலுத்தினர்.

பேரருள்திரு. எஸ்.எம். ஜார்ஜ் அடிகளாரின் மறைவு கலையுலகுக்கும் சமய நல்லிணக்கத் துறைக்கும் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. தாம் நிறுவி, நேசித்து, திட்டமிட்டு வளர்த்த கலைக்காவிரி கல்லூரியிலேயே அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஜார்ஜ் அடிகளாரின் இன்னுயிர் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளில் சாந்தியடைவதாக!

சிந்தனை வட்டம்

"பிரபல இதழ்", "வெகுஜனப் பத்திரிகை", "இலக்கிய இதழ்", "முதலிடம் வகிக்கும் பத்திரிகை". என்றெல்லாம் பீற்றிக்கொள்ளும் இதழ்களிடையே சிகரமாக, நம் "**மக்கள் சிந்தனை**"யின் அக்டோபர் இதழ் அட்டைப்படம் உயர்ந்து நிற்கிறது. "என்பும் உரியர் பிறர்க்கு" என்னும் அன்பின் உன்னதங்களாக, மன்பதையின் உள்ளங்களில் வீற்றிருக்கும் ஆதர்ச இணையரைத் தரிசிக்கும்போது நம் மெய் சிலிர்க்கின்றது. தவத்திரு அடிகளார் அவர்களது கவிதாஞ்சலி, ஒட்டுமொத்த மானுடத்தின் அங்கீகாரமாக ஒலிக்கிறது.

"சாலை விபத்தில்
எமனை வென்ற புதிய பிரம்மன் நீ"

என்ற தொடர், கவித்துவத்தின் உன்னத உணர்வுகளைத் தொட்டு நெஞ்சை நெகிழச் செய்கிறது.

"அன்பு இல்லாத அறிவு இருள்
அன்பும் அறிவும் இணைந்தால் அருள்"

என்னும் புதிய பொன்மொழி. நிலவுலகில் நிலைத்தும் நிற்கும் பெற்றியது.

பேராசிரியர் - கவிஞர் சேதுபதி அவர்களின் கட்டுரை, நம் அகக்கண்களின் முன்னால் அவலக் காட்சிகளைக் காட்டிப் புறக்கண்களில் நீர் மல்கச் செய்கிறது.

இறந்தபிறகும் எட்டு மாந்தர்களாக வாழும் ஹிதேந்திரனை நினைக்கும்போது, வள்ளுவரின் "**உளதாகும் சாக்காடு**" வள்ளலாரின் "**மரணமிலாப் பெருவாழ்வு**" முதலிய தொடர்களின் மெய்ம்மை குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிர்கிறது.

மனித நேயத்தின் மாண்புறு காட்சிகளாக, அசோகன் - புஷ்பாஞ்சலி எனும் ஈக இணையர், டாக்டர். செரியன், உடனுதவி செய்த மருத்துவர்கள், சென்னைப் பெருநகரத்துள் 120 கி.மீ. வேகத்தில் 11 நிமிடங்களுக்குள் தேனாம்பேட்டையிலிருந்து முகப்பேருக்குப் பறந்த ஊர்தி ஓட்டுநர், அதற்குத் துணைநின்ற போக்குவரத்துக் காவல் துறையினர்.... இத்தனை பேரையும் பார்க்கும்போது - "விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு" நிற்கும் இந்த மண்ணில், இனிமேலும் "மானுடம் வெல்லுமம்மா!" என்றே கூவத் தோன்றுகிறது.

– பேராசிரியர்.டாக்டர். அய்க்கண்

மக்கள் சிந்தனை மலர் 23 இதழ் 10ல் சேதுபதியின் ஹிதேந்திரன் பற்றிய எழுத்து கண்ணீரை வரவழைத்துவிட்டது. இதற்கு மேல் எழுதமுடியவில்லை.

– தெ. முருகசாமி, புதுச்சேரி.

மக்கள் சிந்தனை இதழ் வந்ததும் ஒருமுறை படித்துவிட்டு ஏடுகளின் வரிசையில் வைப்பதுதான் வழக்கம். மாண்புமிகுந்த அசோகன்–புஷ்பா, அவர்தம் சீராளன் ஹிதேந்திரன் பற்றிய 2008 – அக்டோபர் இதழை இதயத்தில் ஏற்றிவைத்திருக்கிறேன். இறைவ, இதற்கு மேலும் ஒரு செய்தி உண்டோ, இதயத்தை நெகிழச்செய்ய! இறைவ, இதுவும் உனது திருவிளையாடல்தானோ!

– மு. பழனி இராகுலதாசன், தேவகோட்டை.

ஐப்பசி மாத மக்கள் சிந்தனை இதழ் கிடைத்தது. படித்தேன். ரசித்தேன். மானுடம் வென்றது என்கிற கவிதை அருமை. திரு. சேதுபதி எழுதிய "ஹிதேந்திரன்" கட்டுரையும் அருமை. கட்டுரையில் 18ம் பக்கத்தில் 1994ம் ஆண்டு சட்ட விளக்கம் மிக நன்று. 18,19,20ம் பக்கங்களிலுள்ள செய்திகளைப் படித்துக் கொண்டு இருந்தபோது என் கண்கள் குளமாயின.

மேதகு நீதியரசர் இராமசுப்பிரமணியன் அவர்களது கட்டுரையில், 23ம் பக்கத்தில் தென்னகத்திலே தோன்றிய விவேகானந்தர் தாம் குன்றக்குடி அடிகளார் என்று குறிப்பிட்டுள்ள செய்தி என் நெஞ்சத்தைத் தொட்டது.

ஹிதேந்திரன், அவனது அப்பா, அம்மா படத்தை மேலட்டையில் அச்சிட்டது சாலப் பொருத்தமாகும்.

– காசிஸ்ரீ. V. தெய்வேந்திரன், அருப்புக்கோட்டை.

தவத்திரு அடிகளாரின் "மானுடம் வென்றது" என்ற கவிதை என் கண்களைக் குளமாக்கின.

டாக்டர் அசோகன் – புஷ்பாஞ்சலி தம்பதியரின் மகன் – இதயத்தைக் கொடுத்து இன்னுயிரை வாழவைத்த செல்வன். ஹிதேந்திரனின் நிலைகுறித்து அடிகளாரின் கவிதை எவர் கண்களை நனைக்க வைக்காது?

சேதுபதியின் கட்டுரை முழுதும் படித்தேன். அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

மக்கள் சிந்தனையில், ஈழத்தமிழரின் இன்னல்கள் குறித்தும் அணைக்க அழைக்கும் அடிகளாரின் அழைப்பும் கண்டேன். தொடர்ந்து இதுபோன்ற செய்திகள் வெளிவரட்டும்.

– நாவுக்கரசன், காரைக்குடி.

மக்கள் சிந்தனை ஐப்பசி இதழில், "மானுடம் வென்றது; இறவாத இதயங்கொண்ட ஹரிதேந்திரன்" கட்டுரைகள் யாவர் மனத்தையும் உலுக்கியிருக்கும்.

நேர்முகத்தில் அறிந்த தகவல்கள், திருக்கழுக்குன்றம் – செங்கல்பட்டு – அப்பல்லோ மருத்துவமனை ஆகிய இடங்களின் அருகில் நாமும் உடனிருந்து துடித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வுகளால் பதற்றத்தைத் தந்தது.

தழையத் தழையப் பயிர் போல வளர்த்து, 15 வயதிலே அறுவடையும் பண்ணி, கொடையாக வழங்கிய மருத்துவ இணையர்களின் மனிதநேயம் மகத்தானது!

கண்ணப்பரையும் சிறுத்தொண்டரையும் போல இக்காலத்திலும் மனத்துக்கண் மாசில்லாது – ஒல்லும் வகையான் அறவினை புரிந்து, மாமனிதராக மருத்துவர் தம்பதியர் வாழ்ந்து வரும் திருக்கழுக்குன்றம், கட்டுரை ஆசிரியரின் கருத்துப்படி உண்மையில் இனி வழிகாட்டும் தலமாகவும் விளங்கட்டும்.

– கலைமாமணி.நெல்லை ஆ. சுப்பிரமணியன்

அண்ணா முதலமைச்சரான பிறகு அதே காவல்துறை உயர் அதிகாரி, அவர் பயணம் செய்து வந்த காரை சட்ட சபை வளாகத்திற்குள் வந்தவுடன் ஓடிவந்து முதலமைச்சரின் காரின் கதவை திறந்தார். அதற்கு அண்ணா அவர்கள் இந்த மாதிரியான செயல்களுக்கு தனி ஆள் நியமிக்கப்பட்டுள்ளார். உங்கள் மாதிரியான உயர் அதிகாரிகள் இதைச் செய்தால் பதவிக்கான மதிப்பும் உங்கள் மரியாதையும் தாழும். இனி அதைச் செய்யாதீர்கள் என்றார். ஆங்கிலப் பத்திரிகையிலே இதைக் குறிப்பிட்டார்கள்.

பொதுவாக ஒருவர் தன்னைவிடச் சிறப்பாக பேசவும் எழுதவும் முற்பட்டார்களெனில் தலைவர் என்பவரெல்லாம் தன்னைவிட மீறிப் போவார்களோ என்று அச்சப்படுவார்கள். அதனால் அவர்களை உட்காரச் சொல்லமாட்டார்கள் நிற்க வைத்துக் கொண்டே பேசுவார்கள். தலைவரை விட இன்னும் அதிகம் படித்திருந்தால் நிலைமை இன்னும் மோசமாகும்.

வஞ்சகப் புகழ்ச்சி இருக்கும். பின்னால் கவிழ்த்து விடுவார்கள். அண்ணா தன்மீது நம்பிக்கை கொண்டவரானதால் யாரும் இந்த மாதிரி குறையைச் சொன்னதில்லை. புகழ் ஊக்கத்தைக் கொடுக்கும். மிகைப் புகழ்ச்சி ஆபத்தை உண்டாக்கும் என்பதில் கவனமாக இருந்தார்.

பிறர் பழிக்கும் செயல்களுக்கு நாணுவார். இதனால் மாற்றார் கூட அண்ணாவை மதிப்பர். தன்னைவிட மேலான அரசியலறிஞர்களைப் பற்றி பெருமையாகப் பேசுவாரேயன்றி ஒப்புதல் செய்யமாட்டார். அல்லது பிறரை ஏவிவிட்டுத் தன்புகழை நிலைநிறுத்தமாட்டார். அவர் நினைத்திருந்தால் தன் குடும்பத்தை எங்கேயோ கொண்டு போயிருக்க முடியும்!

தந்தை பெரியார் தன்னைவிட இளவயதினரையும் தன்னால் எழுந்திருக்க முடியவில்லையானாலும் வணக்கம் என்பார். எழுந்திருக்க முயற்சி செய்வார். அவருக்கு நெருக்கமானவர்கள் இதனை மரியாதைக் குறைவென்று சாடுவார்கள். அண்ணாவும் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்வார். சுற்றி வளைத்துப் பேசமாட்டார். அதை சாமர்த்தியம் என்றும் சொல்வதுண்டு. நிருபர்கள் தன்னிடம் எதிர்பார்ப்பதை தெளிவாகச் சொல்வார். சுருக்கமாக அவர் ஒரு மேதை, அடக்கமானவர், எளியவர், தன்னை ஓர் மன்னன் என்று சொல்லமாட்டார். பிறர் மனங் கோணாதவர். அரசியலாளர்களெல்லாம் தங்கள் வருவாயைக் கணக்கிட்டுத் தான் பொதுமக்களுக்குத் தொண்டு என்ற போர்வையில் திட்டம் தீட்டுவார்கள். பழிக்கு வெட்கப்படக்கூடியவர்.

அண்ணாவுக்கான குறள் பொருத்தமானதுதான்.

– உசேன் மஸ்தான், அறந்தாங்கி.

அறிஞர் அண்ணாவுக்கான புகழஞ்சலி சிறப்பாயுள்ளது.

தோற்றத்தில் எளிமை
பழகுவதில் இனிமை
சொல்லில் வளமை
செயலில் செம்மை
அவர்தான் அண்ணா!

} இந்த ப் படைப்பு போற்றுவதற்குரிய புதுக்கவிதையாகப் பொலிகிறது.

அண்ணா அரசியல் உலகில் பண்பாட்டின் சிகரமாகத் திகழ்ந்தார். இன்றைய அரசியல்வாத்கள் அதைப் பின்பற்ற வேண்டும்.

"பெண்வழிச் சேறல்" என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்தைச் சிலர் ஆணாதிக்கக் கருத்தாகக் கருதுவர். அது தவறு.

திருவள்ளுவர், கணவர் எல்லாம் மனைவியரின் சொற்கேட்டு அதன்படி நடக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. கணவனை ஏவுகின்ற, அஞ்சத்தக்க மனைவியரின் சொல்லுக்கு அடிபணிந்து நடக்கக்கூடாது என்றுதான் சொல்கிறார். அதிகாரத் தலைப்பில் உள்ள "பெண்" எல்லாப் பெண்களையும் குறிக்காது.

"காசித் திருநகரம்" பற்றிய விருத்தப்பாக்கள் சிறப்பாயுள்ளன. இறுதிப் பாடலில் உள்ள கருத்துகள் வியப்பைத் தருகின்றன. முனைவர் கடவூர் மணிமாறன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

பெரும்புலவர் ப. அரங்கசாமி, மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார், தமிழாகரர் தெ. முருகசாமி ஆகியோர் படைப்புக்கள் சிறப்பாயுள்ளன.

பொற்கிழிக்கவிஞரின் நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு பொன்னம்பல அடிகளார் ஆற்றிய உரை போற்றுதற்குரியது.

–புலவர். ச.மு. **விமலானந்தன்,** வேலூர்.

ஏ.ஆர்.எஸ். மறைவு



குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் ஐந்து கோவில் தேவஸ்தானத் தலைமை அலுவலகத்தில் 45 ஆண்டுகளுக்கும் மேலாகக் காசாளர் மற்றும் கணக்கர் பணியாற்றிவந்த திரு. **ஏ.ஆர்.சண்முகம் பிள்ளை** அவர்கள் 7.11.2008 அன்று இயற்கை எய்தினார். அவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர்தம் குடும்பத்தினருக்கு "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக்கொள்கிறது. அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடிநீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கிறது.

– **ஆசிரியர்**

கம்பம் எம்.எஸ். செல்வக்கணபதி மறைவு

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீன அன்பரும், உலகத் திருக்குறள் பேரவையின் சிறப்பு உறுப்பினருமாகிய கம்பம் திரு. **எம்.எஸ். செல்வக்கணபதி** அவர்கள் 7.11.2008 அன்று இயற்கை எய்தினார். அப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக்கொள்கிறது. அவர்தம் இன்னுயிர் இறைவன் திருவடிநீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கிறது.

– **ஆசிரியர்**





மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: **04577 - 264567 Mobile : 94433 64200**

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின்அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி பற்றவைத்தல் 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கயாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல் 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் மண்புழு தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.




அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI November 2008 Price Rs. 5-00
Date of Publication 20-11-2008
Registered Newspaper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு அருள் திரு
ஆதீனகர்த்தர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்.கு - வழி
அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166